<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>

<u>**O.S.No.**260/2018</u>

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 3ம் தேதியன்று **DW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.**, முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமரேசன் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**<u>சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வழக்கில் 2ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 1.10.2018 தேதியில் நான் 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணம் இணையவழி நகல் **பிவாசாஆ** 1. 22.10.2018 தேதியில் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் **பிவாசாஆ 2**. 1ம் பிரதிவாதி 5.2.19 ம் தேதியில் எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணம் இணையவழி நகல் **பிவாசாஆ 3** ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.

(**பிவாசாஆ 1 முதல் பிவாசாஆ 3 வரை வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)